
# திராவிடத்தால் வாழ்கிறோம்

905

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

130

# கல்லூரிக் கனவு திட்டம்!

## வசப்படும் உயர்கல்வி வாய்ப்புகள்!







`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...




இந்திய அளவில் உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடுதான் முதன்மை மாநிலம் என்பதைத் தரவுகள் சொல்கின்றன. இந்திய அளவிலான உயர்கல்விச் சேர்க்கை விகிதம் 29 சதவிகிதம் என்றால், தமிழ்நாட்டில் அந்தச் சேர்க்கை விகிதம் 52 சதவிகிதமாக உள்ளது. அதற்குக் காரணம், கல்விக் கட்டமைப்பை வலுவாக்கிய முத்தமிழறிஞர் கலைஞரின் தொலைநோக்குத் திட்டங்களைச் சொல்லலாம்.

முத்தமிழறிஞரின் வழியே நடைபோடும், திராவிட மாடல் அரசும் தமிழ்நாட்டில் அனைத்து மாணவர்களும் உயர்கல்வி கற்க வேண்டும், அதுவும், உலக அளவில், இந்திய அளவில் சிறந்த கல்வி நிறுவனங்களில் கற்க வேண்டும் என கனவு காண்கிறது. கல்வி கற்ற, துறை சார்ந்த பயிற்சி பெற்ற அனைவருக்கும் சிறப்பான வேலைவாய்ப்பு எதிர்காலத்தை உறுதி செய்ய வேண்டும் என்பதும், தமிழ்நாடு அரசின் இலக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறார், திராவிட மாடல் அரசின் நாயகர் நம் முதலமைச்சர்.

கல்வியையும் வேலைவாய்ப்பையும் இணைச் செயல்பாடுகளாகக் கொண்டு 2022-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது 'நான் முதல்வன்' திட்டம். அந்தத் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு 10 லட்சம் இளைஞர்களைப் படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்தி, நாட்டுக்கு வழங்க வேண்டும் என விரும்புவதாகத் திட்டத்தின் தொடக்க நாளில் கூறினார் நம் முதலமைச்சர்.

### உயர்கல்வியில் சிறந்த மாநிலம்!

'நான் முதல்வன்' திட்டம், பல துறைகளையும் இணைப்பதுபோல, 'நான் முதல்வன்' திட்டத்துக்குள் பல திட்டங்கள் சத்தமில்லாத சாதனைகளைப் புரிந்து கொண்டிருக்கின்றன. அப்படியான திட்டங்களில் ஒன்று 'கல்லூரிக் கனவு' திட்டம். தமிழ்நாட்டை உயர்கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலமாக உயர்த்த வேண்டும் என்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டமானது 12-ஆம் வகுப்பு முடித்தவர், உயர்கல்வியில் மாணவர்கள் அடுத்தடுத்து என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம், எப்படிப் படிக்கலாம் என்று வழிகாட்டும். தவிர, பல்வேறு சூழல்களால் உயர்கல்வி சேரத் தயங்கும் மாணவர்களைக் கண்டறிந்து உரிய வழிகாட்டுதல்களைக் கொடுத்து, கல்லூரியில் சேர்த்து விடுவதும் இந்த 'கல்லூரிக் கனவு திட்ட'த்தின் நோக்கம்.

### கல்லூரிக் கனவு கையேடு

இந்தக் கையேட்டில் இந்திய அளவிலான படிப்புகள், அவற்றுக்கான தகுதி நிலைகள், கல்லூரிச் சேர்க்கை விவரங்கள், மின்னஞ்சல் முகவரிகள், ஜே.இ.இ. போன்ற நுழைவுத் தேர்வுகளுக்கான நாட்காட்டி, குறிப்பிட்ட படிப்புகளுக்கான வேலைவாய்ப்பு விவரங்கள் ஆகியவை உள்ளன.



2022-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25-ஆம் தேதி 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் 'கல்லூரிக் கனவு திட்ட'த்தினைத் தொடங்கி வைத்தார் நம் முதலமைச்சர். ஆண்டுதோறும் மே-ஜூன் இரண்டு மாதங்களில் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில், மாவட்டந்தோறும் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு இலக்கு வைக்கப்பட்டது. அந்த வகையில், கடந்த 2022-2023ம் கல்வியாண்டில் அரசுப் பள்ளியில் பயின்று 12-ஆம் வகுப்பில் தேர்ச்சிபெற்ற 3 லட்சத்து 30 ஆயிரத்து 628 மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் அளிக்கப்பட்டது. அதன் மூலம் 2 லட்சத்து 43 ஆயிரத்து 710 மாணவர்கள் மருத்துவம், பொறியியல், கலை மற்றும் அறிவியல், சட்டம், பாலிடெக்னிக் மற்றும் இதர உயர்கல்விப் படிப்புகளில் சேர்ந்துள்ளனர்.

2024-ஆம் ஆண்டுக்கான கல்லூரிக் கனவு திட்டத்தைக் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ஆம் தேதி கோயம்புத்தூரில் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தொடங்கி வைத்தார். 2025-26 ஆம் ஆண்டுக்கான 'கல்லூரிக் கனவு திட்ட'த்தை மே மாதம் 14-ஆம் தேதி சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் துணை முதலமைச்சர் தொடங்கி வைத்து, மாணவர்களுக்கான கையேட்டினையும் வெளியிட்டார்.

> "கல்வி வளர்ச்சியில் தமிழ்நாட்டின் இலக்கை இந்தியாவின் பிற மாநிலங்கள் எட்ட வேண்டுமென்றால், இன்னும் 10, 15 ஆண்டுகள் ஆகும்"

### வழங்கப்படும் வாய்ப்புகள்!

உயர் கல்விக்கான வாய்ப்புகள் உள்ள, பட்டப் படிப்புகள், பட்டயப் படிப்புகள் குறித்த ஆலோசனை, கல்லூரிகளைத் தேர்வு செய்வதற்கான வழிகாட்டல், மேற்படிப்பு முடித்தவுடன் கிடைக்கும் வேலைவாய்ப்புகள் போன்ற விவரங்கள் ஆகியவையும் கல்லூரிக் கனவு திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன.

இந்த வழிகாட்டுதல்கள் மூலம் மாணவர்கள் தங்களின் எதிர்கால குறிக்கோளைத் திட்டமிட்டுக் கொள்ளமுடியும். இந்த ஆலோசனைகள் எல்லாம், துறை சார்ந்த புகழ்பெற்ற வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்களைக் கொண்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்ச்சிகளில் மாநில உயர் கல்வித்துறை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில், அரங்குகள் அமைக்கப்படுகின்றன. அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கின்றனர்.

2025-ஆம் ஆண்டு நிகழ்ச்சியில் பேசிய துணை முதலமைச்சர், "கல்வி வளர்ச்சியில் தமிழ்நாட்டின் இலக்கை இந்தியாவின் பிற மாநிலங்கள் எட்ட வேண்டுமென்றால், இன்னும் 10, 15 ஆண்டுகள் ஆகும்" எனக் குறிப்பிட்டார். பள்ளிப் படிப்பையே தாண்டாத தலைமுறையில் இருந்து சர்வதேச கல்வி நிறுவனங்களுக்கு தயார்படுத்தும் 'கல்லூரிக் கனவு' திட்டம் அந்த ஆண்டு விகிதத்தை இன்னும் அதிகரிக்கும். தமிழ்நாடு அதை சாதிக்கும்.

...சாதனை தொடரும்

---

## சிறுபான்மையினரின் வரலாறும், அடையாளமும் எரிச்சலூட்டுகிறதா?

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் தயாரித்துள்ள எட்டாம் வகுப்புக்கான சமூக அறிவியல் புத்தகத்தில், இஸ்லாமியப் பேரரசுகள் குறித்து, மாணவர்கள் மனதில் மிக மோசமான சிந்தனையை விதைக்கும் பாடத்திட்டங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

மக்களைக் கொன்று குவித்த இரக்கமற்ற ஆட்சியாளர் பாபர் என்றும், மிருகத்தனமான ஆட்சியைத் தந்தவர் அக்பர் என்றும், கோயில்களையும் குருத்வாராக்களையும் அழித்தவர் ஔரங்கசீப் என்றும் பாடத்திட்டத்தில் இணைத்துள்ளனர். இவர்களுடைய ஆட்சிக்காலங்களில் மத சகிப்புத்தன்மையற்ற செயல்கள் பல நடந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அப்படியானால் ஆரியப் படையெடுப்பைப் பற்றியும் பாடத்திட்டத்தில் இணைக்கலாமே?

ஏற்கெனவே, ஏழாம் வகுப்புப் பாடத்திட்டத்தில் இஸ்லாமியர்கள் ஆட்சிக் காலம் குறித்து, முன்னதாக இருந்த அறிமுகங்கள் அனைத்தையும் நீக்கிவிட்டனர். ஆனால், மத ரீதியான வழிபாட்டுத் தலங்கள், புனித யாத்திரைகள் மற்றும் புனிதத் தலங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் பகுதியில் நடப்பாண்டு கும்ப மேளாவில் 66 கோடிப் பேர் கலந்துகொண்டதாக இணைத்திருக்கின்றனர். உத்தரப் பிரதேச அரசின் நிர்வாகத் திறமையின்மையால் கும்பமேளாவில் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்பதையும் இணைத்திருக்கலாமே என்ற விமர்சனங்கள் எழாமல் இல்லை. மாணவர்கள் மத்தியில் மத வெறுப்பு நஞ்சை விதைக்கும் இச்செயல்களுக்கு, நாடெங்கும் பலத்த எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது.

இந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் மகாராஷ்டிர மாநிலத்தின் சாங்கிலி மாவட்டத்தில் உள்ள இஸ்லாம்பூரின் பெயரை ஈஸ்வரபூர் என மாற்றியிருக்கிறது அம்மாநில அரசு. இஸ்லாமிய வரலாறு அல்ல, அடையாளங்களைக் கூட சகித்துக்கொள்ள சங் பரிவார்களுக்கு மனமில்லை. ஆனால், இந்தியாவில்தான் சிறுபான்மையினர் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் இருப்பதாக நா கூசாமல் பொய் பேசியிருக்கிறார் ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜிஜூ. சிறுபான்மையினருக்கு அல்ல, அவர்கள் வரலாற்று அடையாளங்களுக்கும் கூட பாதுகாப்பில்லை என்பதை ஒன்றிய அரசு உணர வேண்டும்.

---

## ஃப்ளாஷ்பேக்



### தீவிர கழகக் குடும்பத்தினர் ஆசை!



சிற்றரசு

2009-ஆம் ஆண்டு, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த சகோதரர் அருள்பிரகாசம், கழகத்தின் தீவிர பற்றாளர்களான தனது பெற்றோர் கலைஞரை சந்திக்க வேண்டும் என்கிற விருப்பத்தை, என்னிடம் வெளிப்படுத்தினார். அதையடுத்து, அவரது பெற்றோருடன் கோபால புரம் சென்று முத்தமிழறிஞரை சந்தித்து வந்தோம். புகைப்படக்காரர் படபடவென புகைப்படம் எடுத்த நேரத்தில், தலைவர் 'போதும்யா... எத்தனை எடுக்குற' என கலகலப்பூட்டினார்.

– திரு.சிற்றரசு, பதிப்பாளர்,
தளபதி பதிப்பகம், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## கருவூலம்

### திருச்சி விழாக்கோலம்!

1982-ஆம் ஆண்டு, மே மாதம் 23-ஆம் தேதி, கலைஞர் சட்டமன்ற உறுப்பினராகி 25-ஆம் ஆண்டைக் கொண்டாடும் வகையில் குளித்தலையில் 'சட்டமன்றப் பணி வெள்ளிவிழா' கொண்டாட்டம் நடைபெற்றது. மாவட்டக் கழகம் ஏற்பாடு செய்த இந்தக் கூட்டம் அறிவிக்கப்படாத மாநாடு போல நடைபெற்றது. குளித்தலையில் விழா என்றபோதும், திருச்சி மாவட்டமே விழாக் கோலம் பூண்டு அந்த விழாவை நடத்தியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131